“பெயர் என்னவாக இருக்கும்?, “ச்சே! நமக்கு மட்டும் ஏன் இத்தனை நாள் இந்தக் கேள்வி தோன்றவில்லை?” என்று யோசித்தவாறு வேலையைத் தொடர்ந்தாள் மனோகரி. பக்கத்தில் இருக்கிற ஒரு பொருளைப்பற்றி நமக்கு எப்போதும் இருக்கும் அலட்சியத்தை அசைத்துப் பார்க்கும் கேள்வியைத்தான் குழலி தன் அம்மாவிடம் கேட்டாள். இளைய மகள் அப்படி ஒரு கேள்வியைக் கேட்பாள் என்று மனோகரி எதிர்பார்க்கவில்லை. விடுமுறை நாட்களில் எல்லோரும் ஒன்றாகச் சாப்பிடவேண்டும் என்பது மனோகரி வீட்டில் எழுதப்படாத விதி, விடுமுறை என்பதால் அவரவர் விரும்பி சாப்பிடும் உணவைச் சமைப்பது வழக்கம், சமைக்க ஆரம்பிக்கும்போதே மாமியார் கமலாம்மாள் “உருண்டை குழம்பு செய்யம்மா, சாப்பிட்டு ரொம்ப நாள் ஆகிவிட்டது, சேகரம்மாவிற்கும் உருண்டைக்குழம்பு மிகவும் பிடிக்கும்” என்றார். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த இரண்டாவது மகள் குழலி “அம்மா! நம்ம பாட்டி, சேகரம்மா என்று சொல்கிற பாட்டி, சேகர் மாமா

அம்மாதானே? அந்தப் பாட்டிக்கென்று சொந்தப் பெயர் இல்லையா?" என்று கேட்டாள்.

மனோகரிக்கு இரண்டாவது மகளைப் பற்றிக் கொஞ்சம் கூடுதல் பெருமை, மற்றவர்கள் யோசிக்காத விசயத்தைக்கூட சர்வ சாதாரணமாக கேள்வியாக்கி விடுவாள். அவளுடைய புத்திசாலித்தனம் பல நேரங்களில் மகிழ்ச்சியையும், சில நேரங்களில் சங்கடத்தையும் உண்டாக்கும். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லமுடியாமல் சற்று நேரம் அமைதியாகிவிட்டாள். எப்படியாவது சாமாளிக்க வேண்டும் என்று "போய் உன்னுடைய பொம்மைகளை அடுக்கு, இதற்கான பதிலை பொம்மைகளை அடுக்கிய பிறகுதான் சொல்வேன்" என்று சொல்லி அனுப்பிவிட்டாள். இதுவரை சேகரம்மாவின் பெயரைத் தெரிந்துக் கொள்ளாத உண்மை அவளுடைய மனதைப் பிடித்து ஆட்டத் தொடங்கியது. தனக்கு நன்கு தெரிந்த ஒரு நபர், தனக்குத் தக்க சமயத்தில் உதவிய ஒருவரின் பெயரை இதுவரை தான் தெரிந்துக் கொள்ளாத செயல் அவளை சிறுமையாக்கிவிட்டதைப்போல உணர்ந்தாள். கைகள் வேலையைச்

செய்தாலும் மனம் சேகரம்மாவை எண்ணி அசைப்போடத் தொடங்கியது.

சேகரம்மாவிற்கும், மனோகரியின் மாமியார் கமலாம்மாவிற்கும் இடையே கிட்டதட்ட நாற்பது வருட நட்பு. முதல் முதலில் சேகரம்மாவைச் சந்தித்ததும், அப்போதிருந்த அவருடைய தோற்றமும் மனோகரிக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. சற்று உருண்ட தேகம், மாநிறம், வட்ட முகம், முகத்தில் ஐந்து சென்ட் அளவிற்கு குங்குமம், நான்கு கல் வைத்த மூக்குத்தி அணிந்து, புன்னகையுடன் வரவேற்றார். திருமணத்திற்கு முன் நடந்த சந்திப்பில் அத்தைதான் அறிமுகப்படுத்தினார். “இவர் என்னுடைய நீண்ட நாள் கூட்டாளி, என் சகோதரி போன்றவர், இவர் இல்லாமல் எங்கள் வீட்டில் எந்த நிகழ்ச்சியும் நடக்காது. அதுபோலதான் அவர் வீட்டிலும்” என்றார்.

அப்போதுதான் அவரை நன்கு கவனித்தாள். அவர் முகத்தில் தாய்மை நிறைந்திருந்தது. எல்லோரிடமும் அளந்து, அளவாகப் பேசினார். அந்தச் சந்திப்பில், திருமண சடங்குகள் நடத்தும் முறைப்பற்றி இருவீட்டாருக்கும் சிறிய பிரச்சனை வந்தது.

“மாங்கல்யம், எங்கள் முறைப்படி செய்யவேண்டும் என்று கமலாம்மாவும், இல்லை எங்கள் முறைப்படிதான் செய்யவேண்டும்” என்று மனோகரியின் அம்மாவும் பிடிவாதமாக நின்றார்கள். சேகரம்மா இடையில் புகுந்து, “நான் ஒன்று சொன்னால் தவறாக நினைக்கவேண்டாம், ஏற்கனவே கமலாவின் இரண்டு மருமகள்களும் போட்டு இருப்பதுபோலதான் மூன்றாவது மருமகளும் போடவேண்டும், ஓரே குடும்பத்து மருமகள்கள் ஒன்றுபோல போடுவதுதான் முறை” என்று தெளிவாக முடிவு சொன்னார். யாரும் சட்டென்று மறுக்கமுடியாத காரணத்தைச் சொன்னபோது, மனோகரிக்கு அப்போது கோபம் வந்தாலும் பின்னர் அவர் சொன்னது சரிதான் என்று மனோகரிக்குப் புரிந்தது. அதற்கு பின் அவள், சேகரம்மாவை, திருமணச் சடங்கின் போதுதான் பார்த்தாள். திருமணம் முடிந்து வணங்கிய போதுதான் “உன் கணவனும் என் பிள்ளைப்போலதான், என்னையும் அத்தை என்றே கூப்பிடு” என்று மனமார ஆசிர்வாதம் செய்தார். அவர் அன்போடு கூறிய வார்த்தைகள் அவரின் மீது தனி மரியாதையைத் தோற்றுவித்தது.

ஓரே குடியிருப்புப் பேட்டையில் வசித்தாலும் அவரை அதிகம் வெளியே பார்க்க முடிந்ததில்லை. ஏதாவது விசேசம் என்றால் வருவார், பங்கெடுப்பார், கிளம்பிவிடுவார். மற்ற நேரங்களில் அவரைப் பார்க்க முடியாது. வாழ்க்கையில் நிறைய நபர்களைச் சந்தித்திருந்தாலும், ஒரு சிலரைத்தான் மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருப்போம். மனோகரியால் மறக்கமுடியாத நபராக சேகரம்மா மாறுவதற்கான நிகழ்வு ஒன்று அவள் வாழ்க்கையில் நிகழ்ந்தது. அவர் செய்த உதவியை மனோகரி எப்படி மறப்பது?

மனோகரிக்கு முதல் குழந்தையின் பிரசவ நேரம். தீபாவளிக்கு முன்னர், வீட்டு சாமி கும்பிடவேண்டும் என்று மாமியார் அழைத்திருந்தார். சாமி கும்பிடுவதற்கான பொருள்கள் வாங்க, கணவரும், மாமியாரும் தேக்கா சந்தைக்குச் சென்றிருந்தார்கள். மனோகரி தனியாக வீட்டில் இருந்தாள். அந்த நேரத்தில் கற்பப்பை நீர்க்குடம் உடைந்துவிட்டது. மனோகரிக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. அதிர்ச்சியில் கை, கால்கள் நடுங்கத்தொடங்கின. முதல் குழந்தை என்பதால் கலக்கத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தாள். கணவருக்கும் மாமியாருக்கும் மாறி மாறி

ஃபோன் அடித்தும் அவர்கள் எடுக்கவில்லை. தீபாவளி சந்தைக் கூட்டத்தில் போன் அடித்தது கேட்கவில்லைப்போல, அம்மாவிற்கு அழைக்க, அவர் உடனே எடுத்தார். “பதற்றப்படாதே! முதலில் அமைதியாக உட்கார், கவலைப்படாதே! கற்பப்பை நீர்குடம் உடைந்தாலும் குழந்தை எட்டு மணி நேரம் நன்றாக இருக்கும். நான் உடனே கிளம்பி வருகிறேன்” என்று சொல்லி வைத்துவிட்டார். அவர் சொன்ன வார்த்தைகள் சற்று ஆறுதலாக இருந்தாலும், அவர் எப்படி வந்தாலும் ஜூரோங்கில் இருந்து செங்காங் வர ஒரு மணி நேரமாவது ஆகும். அதுவும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும் உச்ச நேரம் என்ற எண்ணம் மனோகரிக்குக் கூடுதல் கலக்கமானது.

அந்த நேரத்தில்தான் சேகரம்மாவிடம் இருந்து அழைப்பு வந்தது. அடுத்த பத்து நிமிடத்தில் வீட்டிற்கு வந்து நின்றார். “உன் அம்மா போன் செய்தார் அம்மா, கவலைப்படாதே! உனக்குத் தேவையான பொருள்களை அம்மா எடுத்துவருவார். உன் கணவரும், மாமியாரும் வந்துகொண்டே இருக்கிறார்கள். உனக்கு கசாயம் வைத்து எடுத்து வந்திருக்கிறேன். முதலில் அதைக்குடி” என்று

சொல்லி கசாயத்தைக் குடிக்கவைத்தார். சொந்தங்கள் வரும்வரை இருந்து சாமி கும்பிட்டுவிட்டு வாழ்த்தி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார். கர்ப்பிணியாக. யாரும் இல்லாமல் கலங்கி நின்ற நேரத்தில் 'நான் இருக்கிறேன்' என்று வந்த சேகரம்மா மீது மனோகரிக்கு மிகுந்த மரியாதையும், அன்பும் எப்போதும் உண்டு. அப்படிப்பட்டவரின் பெயர் தெரிந்துகொள்ளாமல் இத்தனை நாள் இருந்துவிட்டதை நினைக்கும்போது அவளுக்கு அவமானமும், வெட்கமும் கூடி தன்மீதே கோபம் வந்தது. அவருடைய உண்மையான பெயரை யாரிடம் கேட்பது என்ற யோசனை வந்ததும், சட்டென்று அவளுடைய கால்கள் அத்தையின் அறைக்குள் சென்று நின்றன.

"சமைத்துவிட்டேன் அத்தை, உங்கள் கூட்டாளி சேகரம்மாவிற்குக் குழம்பு எடுத்து வைத்துவிட்டேன். சாப்பிட வாருங்கள்", என்றவள், "ஆமாம்! அத்தை உங்கள் கூட்டாளி சேகரம்மாவின் உண்மையான பெயர் என்ன?" என்று கேட்டதும். அத்தையின் தலை ஆச்சரியப் பார்வையோடு நிமிர்ந்தது. "இல்லை அத்தை, எப்போதும் அவரைச் 'சேகரம்மா' என்றுதான் சொல்கிறோம்.

உண்மையில் அவரின் பெயர் என்ன? என்ற யோசனை இன்னிக்கு தான் வந்தது. அதுதான் கேட்கிறேன்?" என்றாள்.

துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்த அத்தையிடம் தென்பட்ட குழப்பத்திற்கான காரணத்தை மனோகரியால் யூகிக்க முடியவில்லை. அவர் சற்று நேரம் யோசித்துவிட்டு, "எனக்கு அவங்களை நாற்பது வருடமாக தெரியும், இருந்தாலும் இதுவரை அவரின் பெயரை நான் கேட்டதேயில்லை, நாங்கள் எல் வடிவ வீட்டில் குடியிருந்த காலத்தில் இருந்து அவரிடம் பழக்கம், எல்லோரும் அவரை 'சேகரம்மா' என்று கூப்பிடுவார்கள், நானும் அப்படியே கூப்பிட்டுப் பழகிவிட்டேன். இதுவரை அவரின் பெயரைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று தோன்றியதே இல்லை" என்றார். குரல் குழப்பமாக ஒலித்தாலும், பெயர் பெரிய விசயம் இல்லை என்ற தொனியில் இருந்தது அவரின் பேச்சு. "எப்படி அத்தை, பெயர் கூடத்தெரியாமல் இத்தனை வருடமாக கூட்டாளியாக இருக்கிறீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் மனோகரி.

"நிசமாகவே எனக்குத் தெரியாதும்மா, பெயர் எனக்கு முக்கியமாகப் படவில்லை, எல்லோரும் அழைப்பதுபோல்

அழைத்துப் பழகிவிட்டது. அவரின் பெயர் எதுவாக இருந்தால் என்ன?" என்று கேட்டுவிட்டு தையல் இயந்திரத்தில் உட்கார்ந்து தன்னுடைய வேலையைத் தொடர்ந்தார். "அவர் எப்படி இருந்தால் என்ன, அவர் என்னுடைய நல்ல கூட்டாளி" என்ற தொனி கமலாம்மாளின் உடல்மொழியில் வெளிப்பட்டது. மனோகரியால் அப்படி அலட்சியமாக இருக்கமுடியவில்லை. 'ஒரு பெண் சமுதாயத்தில் தன்னைச் சுற்றி இருக்கிறவர்களுக்குக் கூட பெயர் என்ற அடையாளம் தெரியாமல், வாழ்ந்து முடிவது எப்படிப்பட்ட கொடுமை' என்ற அவளுடைய மனம் துடிக்கத் தொடங்கியது. அடுத்து யாரிடம் விசாரிக்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

"மணி, உங்களுக்காவது சேகரம்மாவின் உண்மையான பெயர் என்னவென்று தெரியுமா?" என்று அடுத்துக் கேட்டது தன் கணவனிடம்தான். "எனக்காவது தெரியுமா என்றால் என்ன அர்த்தம்? இதற்கு முன் யாரிடம் கேட்டாய்?" என்று மறுகேள்வி கேட்டவனின் முகம் கணினியில் இருந்து திரும்பவில்லை. "நான் யாரிடம் கேட்பேன்? உங்கள் அம்மாவிடம் கேட்டேன், தெரியாது என்கிறார்கள், சேகரம்மாவின் இரண்டாவது மகன் உங்கள்

கூட்டாளிதானே, உங்களுக்காவது அவரின் நிஜப் பெயர் தெரியுமா?" என்று அழுத்தமாகக் கேட்டாள். இப்போது கணினியில் இருந்து எழுந்துவிட்டான் மணி. அந்தக் கேள்வி அவனுக்குள் ஏதோ ஒரு பொறியைக் கிளப்பிவிட்டது.

"அட! ஆமாம்மில்ல, இந்த விசயம் இதுவரை எனக்குத் தோணவேயில்லையே" என்றான். மேலும் "என்னுடைய சின்ன வயது கூட்டாளிதான் ராஜா, அந்த வயதில் அவனுடைய அம்மா பெயரைப் பற்றியெல்லாம் நாங்கள் பேசியது இல்லை. வளர்ந்த பிறகும் அவ்வளவாக நெருக்கமில்லை. உண்மையில் எனக்கும் அவர்கள் பெயர் தெரியாது, அதுசரி, உனக்கு ஏன் திடீரென்று இந்த ஆராய்ச்சி?" என்று பதிலுக்கு வினாவினான். மகளுக்காக என்றாலும் தனக்கும் அவர் பெயரைத் தெரிந்துக்கொள்வதில் ஆர்வம் வந்துவிட்டதால், "இல்லை, இத்தனை வருடம் உங்களின் குடும்ப நண்பர் அந்த அம்மா, அவருடைய பெயர் தெரியாமல் இருப்பது ஆச்சரியமாகவும், அதே நேரத்தில் வருத்தமாகவும் இருக்கிறது, அவரின் பெயர் தெரியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அவரா? இல்லை வேகமான வாழ்க்கையில் பிறரைப் பற்றி நமக்கு

அக்கரையில்லாமல் போய்விட்டதா? காரணம் எனக்குப் புரியவில்லை" என்று தனது தேடலுக்குக் காரணம் காட்டினாள். "ஏய் போதும்'லா, நீ ரொம்ப யோசிக்கிறாய், வா! சாப்பிடலாம்" என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அறையை விட்டு வெளியே வர ஆயத்தம் ஆனான். அதற்கு மேல் அவனிடம் கேட்பது வீண் என்று தோன்றியதும்,

"உங்களிடம் போய்க் கேட்டேனே! 'சாட்சிக்காரன் காலில் விழுவதை விட, சண்டைக்காரன் காலில் விழுவது மேல்' நானே அவர்களிடம் நேரில் கேட்டுவிடுகிறேன், விடுங்கள்" என்று சொல்லிவிட்டு மதிய உணவிற்குத் தயாரானாள் மனோகரி.

**சேகரம்மா வீடு;**

"வாம்மா! அத்தை காலையிலேயே போன் செய்தார்கள்" என்று வரவேற்ற சேகரம்மாவின் முகத்தில் வழக்கமான புன்னகை. அன்று பார்த்ததற்கும், இன்று பார்ப்பதற்கும் பெரிய வித்தியாசம் தெரியவில்லை. உடல் சற்று தளர்ந்து இருந்தாலும் பெரிய மாற்றம்

இல்லை, அப்படியே இருந்தார். ஆனால் முதுமையின் காரணமாக முடி நிறைய நரைத்து இருந்தது.

“எப்படி இருக்கிறீர்கள் அத்தை? மாமா எப்படி இருக்கிறார்?” என்ற கேள்விக்கு, “எப்போதும் போலதான், எந்த மாற்றமும் இல்லை” என்று படுத்தப்படியே நினைவற்று உள் அறையில் படுத்திருக்கும் கணவரைக் காட்டினார். “வாம்மா, வெளியே உட்கார்ந்து பேசலாம்” என்று பொதுக்கூடத்திற்கு அழைத்து வந்தார்.

மனோகரிக்கு எப்படி ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. சற்று தயங்கி, அவருடைய முகத்தைப் பார்த்தபடி “அத்தை உங்களிடம் ஒன்று கேட்கவேண்டும், தவறாக நினைக்கவேண்டாம்” என்றாள். அவருக்கு ஆச்சரியமாக இருந்திருக்கவேண்டும். “என்னம்மா, என்னிடம் என்ன வேண்டும், என்னிடம் இருப்பதைக் கேள்! மறுக்காமல் தருகிறேன்” என்றார். சில வினாடிகள் தயங்கிய மனோகரி, பட்டென்று, ‘உங்களுடைய உண்மையான பெயர் என்ன?’ என்று கேட்டாள்.

பெரிய பாரத்தைத் தரையில் பட்டென்று போட்ட நிம்மதியில் பதிலுக்காக சேகரம்மாவின் முகத்தைப் பார்த்தாள் மனோகரி. அந்தக் கேள்வி சேகரம்மாவை அசைத்திருக்கவேண்டும். ஆச்சரியமாக மனோகரியின் முகத்தைப் பார்த்தார். 'என் அத்தைக்கே உங்களின் பெயர் தெரியவில்லை. மற்றவர்களுக்குத் தெரியுமா என்று சந்தேகம், அதனால்தான் கேட்டேன்' என்று விளக்கத்தைத் தந்தாள் மனோகரி.

சேகரம்மா சற்று நேரம் அமைதியாக இருந்தார். பிறகு 'என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டவர்கள் மிகக் குறைவு. சின்ன வயதில் இருந்தே என் பெயரை யாரும் கூப்பிட்டது இல்லை. என் வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள், என்னைப் பற்றியே யோசிக்கத் தோன்றவில்லை' என்றார். அவர் குரலில் இருந்தது சோகமா? வருத்தமா? என்னவென்று பிரித்தறிய முடியவில்லை மனோகரியால். இதுவரை தெளிவான பேச்சையும் எல்லா பிரச்சனைகளையும் எளிதாக சமாளிக்கும் பெண்மணியாக மட்டுமே அவள் கண்களுக்குத் தெரிந்தவர், அவருடைய வாழ்க்கையில் சிக்கல்கள் நிறைந்த இன்னொரு பக்கமா?.

சற்று பெருமூச்சுடன் தனது கடந்த காலத்தைச் சொல்ல ஆரம்பித்தார் சேகரம்மா. “நான் பிறந்தது தஞ்சாவூர் பக்கத்தில் உள்ள கிராமத்தில், விவசாயம் தான் எங்கள் குடும்பத்தொழில், சிறிய வயதிலேயே என் தாயைப் பறி கொடுத்துவிட்டேன். சிற்றன்னை தான் என்னை வளர்த்தார். ஏனோ, நான் அவருக்குப் பாரமாகத் தெரிந்தேன். அவர் ‘துக்கிரி” என்றுதான் கூப்பிடுவார். துக்கிரி என்றால் அதிர்ஷ்டம் இல்லாதவள் என்று பொருள். இன்று அந்த வார்த்தையைச் சாதாரணமாக என்னால் சொல்லமுடிகிறது. ஆனால் அந்த வார்த்தையின் உண்மைப் பொருளையும், அழைப்பையும் அனுபவிக்கும்போதுதான் தெரியும் எவ்வளவு வலி என்று” என்றார். மறந்த பழைய வலியொன்றைத் தோண்டியெடுத்த சாயலில் அவருடைய குரல் ஒலித்தது. அந்த வலியைப் புரிந்தவளாய், “மன்னித்துவிடுங்கள் அத்தை” என்றாள் மனோகரி. “இருக்கட்டும் விடும்மா, நீயும் தெரிந்துகொள்” என்றவர். மனோகரியின் கைகளைப் பிடித்துக் கொண்டு தொடர்ந்தார்.

“வாழ்க்கைச் சிலருக்கு வசந்தத்தை மட்டும் கொடுக்காது, கோடையின் வெம்மையும் அளிக்கும். திருமணம் முடிந்தால் நமக்கு

விடியும் என்று காத்திருந்தேன். எனக்கு பதினாறு வயதில் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்த ஒரே மாதத்தில் என் கணவர் சிங்கப்பூர் வந்துவிட்டார். மீண்டும் என் சித்தியின் ஏச்சுகளும், சொற்களும் என்னைச் சுட ஆரம்பித்தன. சொற்கள் ஏற்படுத்தும் வலி ஆறாத ரணம், மனம்விட்டு யாரிடம் சொல்வது. அத்தனை வலிகளையும் மனதிற்குள் பூட்டிக்கொண்டேன். அப்போதெல்லாம் கடிதப்போக்குவரத்து மட்டும்தான். மாதம் ஒரு முறைதான் என் கணவரிடமிருந்து கடிதம் வரும். சித்தியின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு, என்னால் அங்கு நீண்ட நாள் இருக்கமுடியாது என்று தோன்றத் தொடங்கியது. என்னை அழைத்துச்செல்லாவிட்டால் என்னை உயிருடன் பார்க்க முடியாது என்று என் கணவருக்குக் கடிதம் எழுதினேன். ‘சொன்னால் நீ நம்பமாட்டாய்! அந்தக் காலத்தில் விமானச் சீட்டு விலை அதிகம். ஆனால் என் கணவர் பெரும் செலவு செய்து விமானச் சீட்டை எனக்கு அனுப்பிவைத்தார். எனக்கு எழுதப் படிக்கத்தெரியாது. தமிழ் தவிர வேறு மொழிகள் எதுவும் தெரியாது. சிங்கப்பூர் எனக்கு முன்பின் தெரியாத ஊர். ஆனால், நான் அதைப் பற்றியெல்லாம்

கவலைப்படவில்லை. தனியாக விமானம் ஏறிவிட்டேன். அப்போது ஊரைவிட்டு கிளம்பினால்போதும் என்ற எண்ணம் மட்டும்தான் என் மனதில் இருந்தது.

அப்போது இங்கு, இந்த அளவு வசதி வாய்ப்புகள் இல்லை. தேக்கா பக்கத்தில் ஒரு மாடியில் ஓரறை வீட்டில் வசித்தோம். ஒரே ஒரு அறை மட்டும்தான், எனக்கோ தமிழ் மட்டும்தான் தெரியும். கீழே கடைகள் இருந்தன. சில நேரங்களில் கீழே சண்டை எல்லாம் நடக்கும். மாடியைவிட்டுக் கீழே இறங்கவே பயமாக இருக்கும். என் கணவர் காலையில் வேலைக்குப்போனால் இரவில்தான் வீடு திரும்புவார். ஓரறை வீட்டில் அவர் என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடும் வாய்ப்பே இல்லை. அப்படியே கொஞ்ச காலம் ஓடியது. என் முதல் பிள்ளை சேகர் பிறந்த பிறகு, உலகம் சற்று பழகிவிட்டது. என் இரண்டாவது பிள்ளை பிறந்த பிறகுதான், 'எல்' அமைப்பு வீடு என்று சொல்வார்களே, அந்தக் குடியிருப்பிற்குக் குடிவந்தோம். அங்கு என் மகனின் வழியாக, 'சேகரம்மா' என்ற பெயர் என்னோடு வந்து ஒட்டிக் கொண்டது. அங்குதான் உன் மாமியார் எனக்கு கூட்டாளியானார். என் கணவருக்கு நான்

அனாவசியமாக யாரிடமும் பேசுவது பிடிக்காது. ஏனோ உன் மாமியாரிடம் பேசினால் மட்டும் எதுவும் சொல்லமாட்டார். இன்று படுத்தப்படுக்கையாய் 'தான்' என்ற நினைவே இல்லாமல் இருக்கும் இவர், ஒரு காலத்தில் அவ்வளவு கண்டிப்பானவர். பிள்ளைகள் தவறு செய்தால் நன்கு அடித்துவிடுவார். படிப்பைத்தவிர வேறு நினைவு வரக்கூடாது என்பார். புதிய கலாச்சார மாறுபாடு அவரை மிரட்டி இருக்கவேண்டும். பிள்ளைகளை மற்றவர்களுடன் பழகவிட்டால் கெட்டுப்போய்விடுவார்கள் என்று மிகவும் கண்டிப்பாக இருந்தார். அப்போது அவரிடம் இருந்து இந்தப் பிள்ளைகளைக் காப்பதே பெரும்பாடாக இருந்தது. அந்தக் குடியிருப்பிலும் யாரும் என் பெயரைக் கேட்டதே இல்லை. ஒரு வேளை என் கணவரின் கண்டிப்பும் அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அங்கு இருந்து நான்கறை வீட்டிற்கு மாறினோம். ஓரே வட்டாரத்தில் உன் மாமியாருக்கும், எங்களுக்கும் வடீு கிடைத்தது. அன்றிலிருந்து இன்றுவரை என்னை அப்படியே ஏற்றுக்கொண்ட உன் மாமியின் நட்பு மட்டும்தான் இன்றும் தொடர்கிறது. இன்று என் பிள்ளைகள் அனைவரும் நல்ல வேலையில், நல்ல நிலையில் இருக்கின்றனர்.

அதனால் நான் பெயர் இன்றி வாழ்வது பெரிதாக தெரியவில்லை" என்று சுருக்கமாக கூறியபோது, அவரின் துயரங்கள் சொல்லில் அடைக்கப்பட்டதாகவே தெரிந்தது.

அவரைச் சற்று நேரம் இளைப்பாற விட்டு, "சரி போகட்டும் இப்போதாவது உங்கள் பெயர் என்னவென்று சொல்லுங்கள்" என்று கேட்டாள் மனோகரி. "எனக்கே பயன்படாத, என் பெயரைத் தெரிந்துகொண்டு என்ன செய்யப்போகிறாய்?" என்று பதிலுக்குக் கேட்டார் சேகரம்மா. ஓடி முடிந்த ஒரு நதி கடலில் கலக்கும் கடைசி நொடியின் ஓசையாக அந்தக் குரல் ஒலித்தது. இப்படித்தான் சில நேரங்களில் சற்று தள்ளி நில்லுங்கள் என்று சொல்லாமல் சொல்லுவார்.

"இல்லை, பெயர்தான் ஒருவரின் அடையாளம்', சமுதாயத்தில் வசதியற்றவர்கள் பலர் தங்களின் அடையாளம் தெரியாமல் இருக்கிறார்கள். வடீு இல்லாமல் வாழ்கிறார்கள். ரோட்டில் பழைய பைகளையும் அட்டைக் கோத்தாக்களையும் எடுத்து விற்று அதில் கிடைக்கும் பணத்தை வைத்து வாழும் பலரையும் நான் பார்த்து இருக்கிறேன். அவர்களிடம் அடையாளம் இருக்குமா என்று எனக்குத்

தெரியாது. ஆனால், சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தில் வாழ்கிறார்கள் உங்கள் பிள்ளைகளும், நீங்களும் சிறப்பான நிலையில்தான் வாழ்கிறீர்கள். ஆனால் உங்களுக்கென்று தனி அடையாளம் இல்லாமல் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கு. சரி அத்தை! உங்களுடைய அடையாளம் உங்களுக்கு வேண்டாமா?" என்று ஆதங்கத்துடன் கேட்டாள் மனோகரி. அப்படியாவது தன்னுடைய பெயரைச் சொல்லுவார் என்ற ஆசை அந்தக் கேள்வியில் தொக்கி நின்றது.

"நான் சேகரின் அம்மாவாகவே அடையாளம் காணப்பட்டேன், அப்படியே இருந்து விடுகிறேனே… அரசாங்கப் பதிவேட்டில் மட்டும் இருக்கின்ற, இந்த உலகிற்குத் தெரியாத என் பெயர் அப்படியே தெரியாமல் இருக்கட்டுமே" என்றார் சற்று பிடிவாதத்துடன்.

"சரி அரசாங்க பதிவேட்டை விடுங்கள். உங்களிடம் அடையாள அட்டையும், பாஸ்போர்ட்டும் இருக்கும்தானே? அதைக்கொடுங்கள் நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றாள் மனோகரி. சேகரம்மா தன் பெயரை மறுதலிக்க, மறுதலிக்க, அவருடைய பெயரை எப்படியாவது அடையாளம் காண வேண்டுமென்ற

உத்வேகம் அவளுக்குள் எழுந்தது. எப்படியாவது அவரின் பெயரைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற எண்ண அலைகள் அவளுடைய மனக்கரையை அரித்தன. “நான் இந்தியாவிலிருந்து வரும்போதே, இனி இங்கு வரமாட்டேன்” என்று சொல்லிவிட்டுதான் வந்தேன். இங்கு வந்து கிட்டதட்ட நாற்பத்தியைந்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்றுவரை நான் இந்தியா போனது இல்லை. நான் பிறந்து, வளர்ந்து என் சித்தியின் கொடுமைகளை அனுபவித்த பூமியை ஒருமுறையாவது பார்க்க வேண்டும் என்று அவ்வப்போது ஆசைவரும். ஆனால், இனிமேல் இந்தியாவிற்குப் போவேனா என்று தெரியாது. வாழும் காலத்தில் மிகவும் கண்டிப்புடன் நடந்துக்கொண்டாலும், எங்களை எந்தவிதமான பணக்கஷ்டத்தையும் அனுபவிக்க விட்டதில்லை என் கணவர். இன்று அவர் இந்த நிலையில் இருக்கிறார். அவரை விட்டு இந்தியா செல்வதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை” என்றார் சேகரம்மா. பெயரில் தொடங்கிய பேச்சு எங்கெங்கோ அலைபாய்ந்து, இந்தியக் கரையில் வந்து நின்றது. சேகரம்மாவின் பிடிவாதமும், வைராக்கியமும் ஆச்சரியமாக இருந்தது. “நீங்கள்

சொல்லாவிட்டாலும், நான் உங்களின் பெயரைக் கண்டுபிடித்துவிடுவேன்" என்றாள் மனோகரி. ஒரு பெண் இந்த உலகிடம் தோற்றுப்போய் தன் பெயரைக்கூடச் சொல்லாமல் முடிவது மிகப்பெரிய துயரம் என்று தோன்றியது மனோகரிக்கு. "நீயும் ஒரு நாள் பத்திரிக்கை வாயிலாக என் பெயரைத் தெரிந்துக்கொள்வாய்" என்று மறைமுகமாக இறுதி காலத்தைச் சொன்னார். அப்போதும் சேகரம்மாவின் முகத்தில் வழக்கமான புன்னகை நிறைந்திருந்தது. "வேண்டாம் அத்தை, அப்படி உங்கள் பெயரை நான் தெரிந்துகொள்ளவே வேண்டாம்" என்று வருத்தமாக சொல்லிவிட்டு விடைபெற்றாள் மனோகரி.

ஒரு பெண்ணின் அடக்கப்பட்ட மௌனம், அவளுள் ஆறாத காயத்தை ஏற்படுத்தியது. தன் பிள்ளைகளுக்காகவும், குடும்பத்திற்காகவும் எல்லா சூழ்நிலையிலும் தன்னுடைய அடையாளத்தை இழந்து நிற்கும் இவரைப் போன்று இன்னும் எத்தனை பேரோ' என்ற எண்ணமும், நிச்சயம் அவரின் அடையாளத்தைத் தெரிந்தே ஆகவேண்டும் என்ற உறுதியும் அவளுள் வேரூன்றியது.

‘பெயர் என்னவாக இருக்கும்?’ என்ற யோசனையுடன் கீழே வந்துபோது, திறந்த மின்தூக்கியின் கதவுகளுக்கு வெளியே பரபரப்புடன் நின்றிருந்தான் சேகரம்மாவின் இரண்டாவது மகன், மணியின் தோழன். மனோகரியை அடையாளம் கண்டதும், “அம்மாவைப் பார்க்க வந்தீங்களா சிஸ்டர்?’ என்று கேட்டான். அவள் பதில் சொல்வதற்குக் கூடக் காத்திருக்காமல், “ஒரு சின்ன உதவி சிஸ்டர், வீட்டிக்குத்தான் வந்தேன். ஆனால் இப்போதுதான் என் கூட்டாளி நந்தாவிற்கு ஆக்ஸிடெண்டாகி என்.யூ ஹெச்க்குக் கூட்டிக் கொண்டு போயிருப்பதாக ஃபோன் வந்தது. நான் அவசரமாகப் போக வேண்டும். இந்த லெட்டர்ஸ் எல்லாத்தையும் அம்மாவிடம் கொடுத்துவிட முடியுமா? ப்ளீஸ்” என்றவன், மனோகரியின் கையில் அந்தக் கடிதங்களைத் திணித்துவிட்டுப் பரபரப்பாக நகர்ந்தான்.

சில நிமிடங்களுக்குப் பின், மேலேறும் மின்தூக்கியில், அந்தக் கடிதங்களில் அரசாங்கம் அனுப்பிய ஜிஎஸ்டி அறிவிப்பு பற்றிய கடித உறையில் இருந்த பெயரைப் புன்னகையுடன் பார்த்தபடியே நின்றிருந்தாள்.

வார்த்தைகள் மொத்தம் ; 2,070